R4
N16
147369

சக்தி இலக்கியம்

அல்லது

பலமதுவாய்ந்த நலமுறு நூல்கள்.

இஃது
1915ஹு
தஞ்சைமாநகரம்
கரந்தைத் தமிழ்ச்சங்க வருஷோத்ஸவத்தில்,

T. பக்தவத்ஸலம், பி.ஏ., எம்.பி.பி.ஜ.,
அவர்களால் செய்யப்பட்ட
உபந்யாஸம்.

சென்னை-புரசை,
ரா. விவேகானந்த அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1915.

சக்தி இலக்கியம்

அல்லது

பலமது வாய்ந்த நலமுறு நூல்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 FEB 1916
MADRAS.

கடவுள் படைத்த கணக்கற்ற ஜீவராசிகளில், மனிதனே தலைமை வாய்ந்தவனென்று மதிவல்லோரால் மதிக்கப்படுகிறான். 'அரிதரிது மானிடராதலரிது' என்றறைந்தார் இயற்பெரும் புலவர்! தெரியா உலகத்தின் தேவர்களை ஒரு புறம் வைத்துக் கண்ணால் நாம் கண்ட இக் காசினியை நோக்கும்போது இஃதே உண்மையென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். உலகத்தில் மனிதனை விட உயர்ந்தது வேறொன்றில்லை; மனிதனுக்குள் அவன் மனதை விட உன்னதமானது மற்றொன்று கிடையாது என்று மதிவல்லாரொருவர் மஹா சமத்காரமாய்க் கூறுகிறார். நீராவி போன்றிருந்த நெபுலாவினின்றும், உலகமானது உன்னதமாய்ப் பரிணமித்து, புல்லும் பூண்டும் செடியும் கொடியும் மரமும் மஹா விருக்ஷமும் தோன்றிப் பின்னர், பூச்சியும் புழுவும் தேளும் நண்டும் ஆடும் மாடும் குதிரையும் குரங்குமாய்ப் பற்பல விதமாய்ப் பரிணமித்து முடிவில் வந்து மூர்த்திகரித்த மனிதனை விட மாட்சியுற்ற ஜீவராசி இந்த ஜகதலத்தில் வேறு யாது காணக் கூடும்? ஹா! மனிதன்! மனிதன்! மனிதன்! மஹத்தான உலகத்தில் மஹாமேருவென்று சொல்வதுபோல் ஜகத்தான ஸ்ருஷ்டியில் மனிதனே, மிகுத்தானாய்க் காண்கிறான்! மனிதனைவிட உயர்ந்த பொருள் மாநிலத்தில் கிடையாது!

மனிதனுக்கும் மிருகத்திற்கும் மஹா வித்தியாசமுண்டு! தீயை மூட்டித் திவ்யமான உணவு செய்ய மற்ற மிருகங்களுக்குச் சுத்தமாய்த் தெரியாது: நெருப்பை யுண்டாக்கி அடுப்பை மூட்டி வேண்டிய உணவைத் தனது விருப்பத்தின்படி செய்து கொள்ள மனிதனுக்குத் தெரியும். திருத்தமான பதங்களால் பொருத்த

மான பேச்சைப் பேச மிருகங்களா லாகாது: எண்ணக் கோவையை வண்ணச்சொற்களால் வகையாய்ச் சொல்ல மனிதனுலாகும். எழுதமுடியாது மற்ற மிருகங்களால்: எழுதமுடியும் மனிதனல்! இதுமாத்திரமா? நான்கையும் சேர்த்து நன்று யோசித்துப் பகுத்தறிய வேண்டிய விஷயங்களைப் பாகுபாடு செய்துணர்ந்து, யூகித்து, அநுமானித்து, யுக்தியோடும் சக்தியோடும் காரியங்களைச் சித்தி செய்துகொள்பவன் மனிதனேயாகிறான்! கடவுளுண்டென்று திட மனம் படைப்பவன் மனிதனேயாகிறான்! தர்மாதர்மங்களின் தத்துவ நிலையைச் சித்தத்தில் பதிப்பவன் மனிதனே! அறம்பொருளின்பம் வீடு என்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் சகஜமா யறிபவன் மனிதனே! கடவுளின் படைப்பாகிற கண்ணியமான கோயிலில் உத்தமமான மனிதனே உன்னதமான கோபுரமாகிறான்! நவரத்தினங்களாகிற ஒளிக்கற்களில், அறிவொளிபரப்பும் அற்புத மனிதனே சுடரொளிவிரிக்கும் மாணிக்கமாகிறான்! நாற்றங்களிலும் நறுமணம் வீசி மனதிற்கு மகிழ்வையும், அறிவிற்கு விரிவையும் அற்புதமாய்க் கொடுக்கும் ஆனந்தமலர்களில், சிங்கார மனிதனே சிறப்பான ஜாதிமல்லிகை யாகிறான்!

இத்தகைய மேன்மை வாய்ந்த மனிதர்கள் தங்கள் அபிப்பிராயங்களை ஒருவர்க்கொருவர் தெரிவித்துக் கொள்ள உறுதியாயமைந்ததே உத்தமமான பாஷை யாகும். அவ்வாறே இந்தியா தேசத்தின் சுந்தரத் தென்னாட்டில் நந்தமக் கியைந்த பாஷை நல்முறு

தமிழ்ப் பாஷை!

அந்த சந்தம் மிகுந்த சுந்தரத் தமிழ்ப் பாஷை! ஹா! அந்தத் தமிழ்ப் பாஷையின் அருமையைக்கூற யாவராலாகும்! மனதைக் கனிவித்துப் பக்தியை விளைவித்துப் பரமானந்தப் பொக்கிஷத்தைப் பக்குவமாய்த் தந்தருளும் உத்தமமான பாஷை, நல்ல உயர்தரமான பாஷை, நம்தம் சொந்த மாகிய நல்ல தமிழ்ப்பாஷை! சிங்காரச் சொற்களைச் சிறப்பா யடுக்கி, அலங்காரக் கட்டடமாக அற்புத நூல்களைப் பொற்புட னமைக்க, ஆனந்த மயமாய் நம்மிடம் அகங்களித் துலாவுவது அமிழ்தினு மினிய தமிழ் மொழி

யாகும்! கண்டோர் வியக்கும் கற்கண்டு மலைமீது, பால் மாரியும் தேன் மாரியும் பல் கால் பொழிய அமிர்தப் பெருக் கெடுத்து ஆறுய்ச் செல்லுவது ஐயன் நமக்குத் தந்த அற்புதத் தமிழ் மொழி யாகும்! தமிழ்ப்பாஷை, தத்துவ நூல்களு கியைந்த உத்தமப் பாஷை! தமிழ்ப் பாஷை, தங்கப்ரகாஸ இங்கிதப் பாஷை! தமிழ்ப் பாஷை, நந்தமக் கெல்லாம் தாய்ப் பாஷை, தலைமைப் பாஷை! கம்பனுக் குதவிய கற்பகப் பாஷை, நந்தமக் கியைந்த நல்ல தமிழ்ப் பாஷை! ஆழ்வார்களுக் குதவிய அன் பார்ந்த பாஷை, அருள் மயமே யான ஆனந்தத் தமிழ்ப் பாஷை!! நால்வர்க்குதவிய நளினத் திருமொழி, நவரசம் விளைக்கும் நல்ல தமிழ்ப் பாஷை!

எந்தப் பாஷைக்கும் தோற்காத இந்தப் பாஷை, எல்லா விஷயங்களையும் தாங்க ஏற்றதாய் விளங்குகின்றது! நூதன விஷயங்களையும் நுட்பமாய்த் தாங்கிப் போதனை செய்யும் புனிதம் வாய்ந்திருப்பது நம் பாஷை! எந்தக் கவிக்கு முன் தான் நந்தம் கம்பன் கவிதை தோல்வி யுறும்! கால பேதத்தால் வரும் கற்பனு பேதங்களையும், ஆராய்ச்சிப் பெருக்கத்தால் வரும் அரிய புதிய கருத்துகளையும் கூடத் தானே யேற்றுத் தன்மய மாக்கித் தான் தானேயாய் நிற்கும் தகைமை வாயந்ததாய் நமது தமிழ்ப்பாஷை விளங்குகின்றது! அரிய கருத்துகள், புதிய அற்புதங்கள் அங்கங்கே காணப்படுமாயின், அவற்றையும் தான் ஆவாஹனஞ் செய்துகொண்டு, தான் அவற்றின் மயமாகாது, அவற்றைத் தன்மய மாக்கி, அழகுற நிற்பது, ஒளிபெற வளர்வது, ஓங்கி ஓங்கி மேன்மேலும் வளர்வது உத்தம மான நம்தம் முத்தமிழாகும்! சொல்லச் சொல்லச் சுவைத்துப் பாடப் பாட வினித்துப் பக்குவமாய் நமக்குப் பாகைப்போல் விளங்கிப் பலவகைப் பாஷைகளின் நலமுள குணங்களையும் ஏற்கத் தகுந்த இயைபுடைத்தாகி நந்தம் தமிழ்ப் பாஷை நன்ருய் விளங்குகின்றது. அழகுற்ற நமது ஆங்கில பாஷையின் அமைதியைச் சற்றே ஆராய்வோமாயின், நாம் இங்கு கூறும் உண்மை நன்ருய் விளங்கும்! எத்தனை பாஷைகளோ நமது இங்கிலீஷில் கலந்தபோதிலும், பாஷையென்னவோ ஆங்கிலமாகவே நின்று, சுவைகளெல்லாம் மாத்திரம் சொகுஸாக விளங்குகின்றது. Camden என்பவரியற்றிய The Elements of the English Tongue என்னும் புத்தகத்தில் இதை என்ன அழகாய்

விளக்கி யிருக்கின்றார் பாருங்கள்! இத்தாலி பாஷை யானது
இனிமையா யிருக்கின்றது; ஆனால் அஃது சில்லென ஓடும்
மெல்லிய நீர்போல் வலிவில்லாது தானே வாளா செல்கின்றது.
ப்ரெஞ்ச் பாஷை மிருதுவானது, ஆனால், வாயைத்திறந்தால்
எங்கே வனப்பழிந்து விடுமோ வென்று உதட்டையே அசைக்
காத உத்தமியைப் போல், சொகுஸே யில்லாது அப்பாஷை
சும்மா விருக்கின்றது! ஸ்பானிஷ் பாஷை கம்பீரமானது, ஆனால்
அஃது அளவுக்கு மிஞ்சி ஆட்டம் போட்டு ஆயாசத்தை
உண்டாக்கி அனர்த்தம் விளைக்கிறது. டட்சு பாஷையோ புருஷத்
தன்மை வாய்ந்தது, ஆனால் சொன்னதைச் சொன்ன மாத்திரத்தில்
சன்னதங் கொண்டு வம்புச் சண்டைக்கு வலிய இழுப்பவனைப்
போல, கர்ன கடூர முள்ளதா யிருக்கிறது. இப்பொழுது நாம்,
அவைகளிடமிருந்து அனேகவற்றைக் கொண்டு வருவதில், மெய்
யெழுத்தின் மிநிக்கை யெல்லாம் இத்தாலி பாஷையோடு இனிமை
யையாய்ப் புணர்த்தும், பதங்களுக்கெல்லாம் முழுமையாய்ப்
பழுத்த சப்தத்தைப் பிராஞ்சு பாஷைக்குப் பிகுவாய்ச் சேர்த்தும்,
உன்னதமான அதிக உயிரெழுத்துகளால் டட்சு பாஷைக்குத்
தண்மையைவிளைத்தும், நல்ல பூக்களிலிருந்து உல்லாஸமான தேனை
உத்தமமான தேனீக்கள் மெத்த சொகுசாய்ச் சேர்த்து, உபயோக
மற்றவற்றை உதறி விடுவதுபோல், நல்லவற்றிலுள்ள நாண
யங்களை யெல்லாம் வல்லவாறு கொடுவந்து வகையாய்ச் சேர்த்துக்
கொண்ட அரிய பெரிய ஆங்கிலபாஷையானது, சுவைமயமா
யில்லாது சும்மா எப்படியிருக்கும்?"—இவ்வாறு கேட்கிறார் இணை
யில்லாக் காம்டன் என்பவர். எல்லாச் சுவைகளையும் ஏற்கனவே
யுடைய நம் தம் சுந்தரத்தமிழும், காலவிசேஷத்தால் கருத்துகள்
சேர்க்க வேண்டியதாயினும் தன்மயமாய் நின்று தானே விளங்கு
மல்லது வேற்றுருக் கொண்டு மாற்றுரு வடையாது.

இவ்விதமாய் வனப்பு வாய்ந்த எதிரில்லாத நமது தமிழையும்
நமது தமிழிலக்கியத்தையும் போற்றி வளர்ப்பது நமக்கு
ஏற்ற கடனாகிறது! எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகும்
என்று ஔவைப்பிராட்டியார் அறைந்திருக்கிறபடி, நமது இலக்கி
யத்தை நாம் அசட்டை செய்வோமாயின், நம்மிற் குறைந்தோர்
நானிலத்தில் கிடையார், நம்மைக் காட்டினுங் குருடர் நாடெங்கும்
அகப்படமாட்டார்! அறிவை வளர்ப்பதற்கும், ஆனந்தம் விளைப்

பதற்கும், உண்மையை உணர்த்துவதற்கும் உற்சாகத்தை ஊட்டுவதற்கும் இலக்கியமே, நமக்கு, இயைந்த வழியாயிருக்க, அதனை மறந்து, அதனை அசட்டைசெய்து, அத்தகைய தமிழிலக்கியத்தை அடியோடே அவமதித்து, யாவராயினும் எந்தத் தமிழராயினும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வாராயின், அவர்களே தேசவிரோதிகள், அவர்களே பாஷாவிரோதிகள், அவர்களே நம் செந்தமிழிலக்கியத்தின் வேரைக்கிளறி வெந்நீருற்ற வந்த விபரீத புருஷர்கள்! பாஷை மேன்மேலோங்கவும், தேசஞ் செழித்துத் திருத்தமாய் விளங்கவும், நல்ல எண்ணங்களும் நாகரிகக் கோட்பாடுகளும் மேன்மேலு முண்டாய் மேன்மேலுந் தயங்கவும், நானு விதங்களிலும் நாகரிகம் பெருக வேண்டியதாயின், நம் இலக்கியத்தை நாம் போற்ற வேண்டும், நம் இலக்கியத்தை நாம் வாழ்த்தவேண்டும், நம் இலக்கியத்தை நாம் காலத்திற்கியைந்தவண்ணம் நன்ருக வளர்க்க வேண்டும்! இஃதே எல்லாச் சீர் திருத்தங்களுக்கும் இயைந்த நல்ல அஸ்திவாரம்! இலக்கிய அபிவிருத்தி யில்லலாத தேசத்தார், எதொன்றுக்கும் பலன்பட மாட்டார். ஆலோசனை பெருகவும் ஊக்கம் விளையவும் அழகான இலக்கியம் அற்புதமாகப் பெருகவேண்டும். நம்மனோர் இதை விடுத்து வேறுவிஷயங்களிற் பேரவாக் காட்டுவது விபரீதமாகவே முடியும்!

நமது சொந்த பாஷை தமிழ், நமது தாய்ப் பாஷை தமிழ், நாம் உற்ருர் உறவினரோடு அளவளாவிப் பேசுவதும், பெற்ருர் பிள்ளைகளோடு கொஞ்சிக் குலாவுவதும், நண்பர் நாட்டாரோடு நளினமாய் வார்த்தையாடுவதும் எல்லாம் தமிழ்! இத்தகைய நமது சொந்தப் பாஷை வழியாக, சொந்த இலக்கியத்தின் துறையாக, அவசியமான சீர் திருத்தத்தை அற்புதமாகப் புகன்ருலொழிய, யாதொரு நன்மையும் கிட்டாது, எதொரு லாபமும் காணுது! ஆகையினுல், நம் இலக்கியத்தைத் அவஸ்யம் விர்த்தி செய்யவேண்டுமென்பது நன்கு ஏற்படுகின்றது.

இலக்கியமென்பது இருவகைத்து

என டிக்வின்ஸி என்பவர் திருத்தமாய்க் கூறுகிருர். இலக்கியம் அறிவிலக்கியம் சக்தியிலக்கியம் என இருவகைப்படும். ஆராய்ச்சி வழியாக அரிய விஷயங்களைக் கண்டு, நூதனப் பொருள்களை

யெல்லாம் நுட்பமாய் விவரிப்பது அறிவிலக்கியத்தின் செயலாகும்: மனதைத் தூண்டி உற்சாகப்படுத்தி ஆனந்த வாரிதியில் அமிழச் செய்து, உத்தேசித்த காரியத்தில் மனிதனை ஊக்கமாய்ச் செலுத்துவதே சக்தியிலக்கியத்தின் உத்தம நோக்கமாகும். அறிவிலக்கியம் போதிப்பது: சக்தியிலக்கியம் சாதிப்பது! அறிவிலக்கியம் என்பதை டிக்வின்ஸி என்பவர் Literature of Knowledge என்றும், சக்தியிலக்கியம் என்பதை Literature of Power என்றும் கூறுவர். அறிவிலக்கியத்தைப் பூமியில் செல்லும் வண்டிக்காவது நீரிற் போகும் படகுக்காவது ஒப்பிட்டால், சக்தியிலக்கியத்தை ஆகாயத்திற் பறக்கும் அதி விநோதக் கப்பலுக்கு ஒப்பிடலாம்! விஷயங்களை யெல்லாம் வெவ்வேறாகப் பாகுபாடு செய்து, அறிவிற்கு உணவாக ஆவலோடு தருவது அறிவிலக்கியத்தின் அற்புதக் கடமையாகும்: தெரிந்த விஷயத்தையே தேறுதலாக எடுத்துக் கொண்டு, மனதிலவற்றை மாண்புடன் நிறுத்தி, ஆங்கே கோடிக்கணக்காய் அழகழகாய் காணப்படும் இரக்கங்களுக்கும் உருக்கங்களுக்கும் களிப்பிற்கும் எழுச்சிக்கும் உத்ஸாகம் விளைத்து உன்னதமாய் வெளி வருவதற்கு ஊக்கம் விளைப்பது சக்தி யிலக்கியத்தின் உற்ற கடமையாகும். அறிவிலக்கியம் தரை மட்டத்தில் நகரும், நடக்கும்: சக்தியிலக்கியம் உயர எழும்பும், மேலேபறக்கும்! The function of the Literature of Knowledge is - to teach: the function of the Literature of Power is – to move.

இலக்கிய மென்பது பொதுவாக நூல் தொகுதியைக் குறிக்கும். மனதின் முத்தொழிலாகிய Thinking, Feeling, Willing ஆலோசனை, உணர்ச்சி, கருமந்துணிதல் என்பவற்றின் தன்மையை யனுசரித்து, இலக்கியத்தின் மேற்சொன்ன இரண்டு பாகுபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. Thinking, Thought, Intellect அறிவு, ஞானம் என்பதை யனுசரித்து, அறிவிலக்கியமும், Feeling, உணர்வு, Willing கருமந்துணிதல் என்பவற்றை யனுசரித்து சக்தி யிலக்கியமும் விளங்குகின்றன. மேற்கூறிய மூன்றுமே மனதின் பாகுபாடென மேற்புல விஞ்ஞான சாஸ்திரிகளால் கருதப்பட்டிருக்கின்றன. ஆகவே மனதின் தொழிலாகிய அறிவுக்கியைந்து, நூதன நூதன விஷயங்களையும் ஆராய்ச்சி விஷயங்களையும் அறிவுக்கு உணவாகத்தந்து செல்லும்

நூல்கள் அறிவிலக்கிய மென்றும், உணர்வு என்னும் மனத்தொழிலுக்கினயந்து, மனதின் உணர்ச்சித்தொழிலை யுறுதிப்படுத்தி, அன்பையும் அருளையும், தயையையும் தாக்ஷிண்யத்தையும், இவை போன்ற உத்தமக் குணங்களை யெல்லாம் உறுதிப்படுத்தி மேன்மேலும் நன்மையை மேதினியில் விளைப்பதற்கிசைந்த நூல்கள் சக்தியிலக்கியமென்றும் சொல்லப்படும். இங்கு நாம் சக்தி யிலக்கியமென்று கூறுவதால் சிவசக்தி சம்பந்தமான நூலைப்பற்றி யாதோ சொல்லப் புகுவதாய்க் கருதுதல் கூடாது.

இனி, அறிவிலக்கியத்திற் சேர்ந்த நூல்களாய் எவற்றைச் சொல்லலாமென்றால் விஞ்ஞான சாஸ்திர வியாசங்களையும், தத்துவ விசாரணைக்கிசைந்த ஆராய்ச்சி நூல்களையும் உணர்ச்சிக்குச் சம்பந்தமில்லாது விஷய போதனையிலேயே வியாபாரஞ்செய்யும் எல்லா நூல்களையும் இவைபோல்வன இன்னுமுள்ள நூல்களையும் இங்கே உதாரணமாகக் காட்டலாம். பக்தியிற் பழுத்துச் சித்தத்தையுருக்கும் சிறந்த நூல்களையும், உள்ள ராமாயணத்தை ஒருகோடி வழியா யிழுத்து நீதியாகும் நின்மல எண்ணத்தை மனமாகும் நிலத்தில் மாண்புடன் விளைத்து உன்னதமான கருத்துகளை யெல்லாம் ஊதி ஊதி நமக்கு உள்ளே புகுத்தி வெல்லச் செப்பில் நல்ல மருந்தை மெல்லக் கொடுத்து மிடியைத் தீர்ப்பதுபோல், உள்ள பொருளை யெல்லாம் கள்ளத்தனமாய் மெள்ளக் கொடுக்கக் கம்பனியற்றிய கவின்பெறும் நூல்களையும், பாவலர் நாவலரியற்றிய பற்பல நூல்களையும் சக்தியிலக்கியத்திற்கு ஒத்த உதாரணங்களாய்க் கூறலாம்.

இன்னொரு வித்தியாசமும் இவற்றிற்குள் நாமறியக்கூடும்! அறிவிலக்கியமென்பது அழியக்கூடும், மாறக்கூடும்: சக்தி யிலக்கியத்தின் பாற்பட்ட உத்தம நூல்களோ, உலகமுள்ளவரைக்கும் ஒரே படித்தாய் என்றென்றும் அழியாது ஏகரீதியா யிருக்கின்றன. ஹோமரியற்றிய உன்னத நூல்களும், வர்ஜி லியற்றிய வண்மையான கிரந்தங்களும், ஷேக்ஸ்பியர் மில்டன் தந்த சிறப்பான நூல்களும், காளிதாசனும் கம்பனும் தந்த கவிதா ரத்னங்களும் எத்தனை வருஷங்களானாலும் இறந்து படவில்லை, இன்னும் எத்தனை யுகங்களானாலும் இறந்தே போகா! அன்[illegible] நித்யகல்யாணமாய், ஒருநாளும் வாடாத உச்சிதமான [illegible], அச்சத

னைப்போல அழியாத் தன்மையவா யிருக்கும். அறிவிலக்கியத்தின் பாற்பட்ட நூல்கள் அற்புதம் வாய்ந்தவைகளா யிருப்பினும், ஒருகாலத்தில் மறைந்துவிடும் ஊறுள்ளவையா யிருக்கின்றன. கணித நூல்களோ, விஞ்ஞான சாஸ்திர வியன்பெரும் நூல்களோ, அன்றித், தத்துவபோதனை செய்யும் உத்தம நூல்களோ, எவையாயினும், அவைகளிற் கூறியுள்ள விஷயங்கள் அபத்தம் என்று பின்னொரு காலத்தில் முன்னே வருமாயின் அவைகளிறந்து படும். அல்லது அந்நூல்களில் அவ்விஷயங்கள் கூறப்பட்டுள்ள முறைமை அவ்வளவாய் நன்றாயில்லை என்று ஏற்பட்டு அவ் விஷயங்களையே புதுமாதிரியாக வகுத்தும் தொகுத்தும் வண்மையாக வேறு நூல்கள் திண்மையாக வெளிப்பட்டு விட்டால், முன்னவை தோன்றாது மின்னல்போல் மறைந்துவிடும். இம்மாதிரி நோக்கும்போது, நியூடன் என்பா ரியற்றிய நுட்ப நூல்கள் திட்பமாய் மறைந்தாலும் மறையும், மில்டனியற்றிய மேன்மையான கிரந்தம் எந்த நாளும் மறைந்து இறந்துபோகவே போகாது என்று டிக்வின்ஸி யென்பார் தெளிவாக விவரிக்கிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் இன்னொன்றும் கவனிக்கவேண்டும். புத்தக ரூபமாய் வந்தவைகளெல்லாம் இலக்கியமென்று கொள்ளலுமாகாது, புத்தகத்தில் வாராதவைகள் இலக்கியமன்று எனக் கொள்ளலுமாகாது. கந்தல்பொந்தலைச் சேர்த்தால் காசி துப்பட்டா ஆகாததுபோல், வகை தொகையற்ற விஷயங்களை வழிதுறையில்லாதபடி, இலக்ஷணமேயில்லாது, எட்டேகால் லக்ஷணமே எங்கெங்கும் பல்லையிளித்துத் தொல்லைவிளைக்கும்படி எழுதிய புத்தகங்கள் எப்படி யிலக்கியமாகும்? மனதில் நினைத்தது நினைத்தது வாயில்வந்தது வந்தபடி உபயோகமில்லாத விஷயங்களை உன்னதமில்லாத நடையிலெழுதி அச்சிற் பதித்து அரை அணுவுக்கு இரண்டுபுஸ்தகம் இலவசமாய் விற்கிறார்கள்! இதைக்கண்ட என்ஸைக்லோ பீடியா காரர் அதாவது வித்யா மண்டல வியன்பெரும் நூலார், இப்பொழுதைய தமிழைப் பற்றிப் பேசிக்கொண்டுவரும்போது கணக்கில்லாத புத்தகங்கள் காணப்பட்டபோதினும், அவற்றில் அனேகம் சத்தையற்ற சொத்தைச் சுவடிகளா யிருக்கின்றன என்று அனுதாபத்தோடு ஐயோ என்று எழுதுகிறார்கள். இத்தகைய புத்தகங்களும் இலக்கியமாகா, வியாபாரத்திற்காகப் பதிப்பிக்கப்படும் விக்கிரயபத்திரங்களும் இலக்கியமாகா.

எப்படி அச்சிற் கண்டதனுலேயே அரிய இலக்கிய மென்று சொல்லக் கூடாதோ, அப்படியே அச்சில் வாராத அனேக விஷயங்களும் இலக்கியத்தின்பாற் பட்டனவென்று இயம்புதல்கூடும். அச்சில் வராத அனேக உபந்யாஸங்களும் அச்சில் வாராது அரங்க மேடையில் மாத்திரம் நடித்துள்ள அற்புதநாடகங்களும் அச்சில் வாரா திருந்தபோதிலும் அரிய இலக்கியத்தில் உரிமையாய்ச் சேரும்.

ஆக, இலக்கியம் இருவகைப்படுமென்றும், அவைதாம் அறிவிலக்கியம் சக்தியிலக்கிய மென்றும், Psychology என்கிற மானஸ தத்துவ சாஸ்திரப்படிமனதின் முத தொழிலாகிய அறிதல், (Thinking), உணர்தல் (Feeling), கருமங் துணிதல் (Willing) என்பவற்றுள், அறிவிற்கு உணவாயியைந்து ஆராய்ச்சிவழியிலே புகுந்து அற்புதம் விளைத்தல் அறிவிலக்கியத்தின் கடமையா மென்றும் மற்ற இரண்டு தொழிலாகிய உணர்தல், கருமங் துணிதல் (Feeling & Willing)என்பவற்றோ டியைந்து ஏக்கம் போக்கி ஊக்கம் விளைத்தல் சக்தி யிலக்கியத்தின் சாகஸத் தன்மையா மென்றும், இவற்றுள் பேரிலக்கியம், சரியான இலக்கியம் சக்திலக்கியமே யென்பது டிக்வின்ஸிப் புலவரின் தீர்மானமான அபிப்பிராயம்,அஃதே சரியான அபிப்பிராயமென்றும் ஒருவாறு கூறினேம். இதனுல் அறிவிலக்கியத்தால் அரிய பய.னென்று மிலது என்று கூறினதாய் அபிப்பிராயப்படலாகாது. சாஸ்திரப் பயிற்சிக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் அவஸ்யம் வேண்டியது அறிவிலக்கியமே, அதைநாம் வளர்க்கவேண்டியதும் மிக அவஸ்யமே, அவற்றை ஒருவாறு சக்தி யிலக்கியத்தோடு சேர்த்து, இரண்டின் தன்மைகளையும் இயன்றவாறு பொருத்தி உன்னதம் விளைப்பது இன்னும் உத்தமமே!

அறிவிலக்கியத்தின் கடமை அவ்வாறாக, சரியிலக்கியமாகிய சக்தியிலக்கியத்தைப் பற்றிச் சிறிது கூறி இதனை முடிப்போம். சக்தி யிலக்கியத்தின், முக்கியத்தன்மை யாதெனின், எந்தக்காலத்தும், ஒரு பாஷையை யுணர்ந்த எல்லா மனிதர்க்கும் பொதுவினுபயோகப்பட்டு, பொதுநோக்க முடையதாய், பொதுநன்மைக் கியைந்ததாய், என்றும் மாளாது என்று முள்ளது சக்தியிலக்கியம்! இதற்கு இன்றியமையாதது, சொற்சுவை யுள்ள நடை, பொருட்சுவை ததும்பிய பாஷை! சொற்கள் போகிற சொகுஸினும், பொருள்கள் செல்லுகிற போக்கிலும், மனதைப் பண்

படுத்தி, மனதை வசப்படுத்தி, மனதை உருக்கி, மனதைக் கரைத்து மாண்புறச் செய்வது மாண்புறும் சக்தி யிலக்கியத்தின் உத்தமக் கடமை யாதலால், சக்தி நூல்க ளியற்றுவதற்கு வேண்டும் பாஷை நடையைப்பற்றிச் சிறிது பகரவேண்டியிருக்கிறது. சாதாரண மாய் நூல்க ளியற்றுவதில், வசனம், பாட்டு இரண்டிலொன்று வேண்டுமென்று எண்ணப்படுகிறது. இரண்டுமே போதா, இன்னொன்றும்வேண்டும்! அதாவது, வசனப்பாட்டு, பாச்சுவை பரவிய பண்புள்ள நடை. அலங்கார மில்லாத வெறும்வாசகம் அறிவிலக்கியத்திற் கொவ்வுமே யன்றிச் சக்தி யிலக்கியத்திற்குச் சரிவராது! அலங்காரநடையும அற்புதப்போக்கும் அதிகரிக்க அதிகரிக்க வசனமும் பாட்டாகும், வாக்கியமும் இசையாகும், சொற்களும் சுந்தரமாகும், பொருளும் பொன்னைப்போ லோங்கி மின்னித் துலங்கும்! வசனப்பாட்டு, பாச்சுவைபரவிய பண்புள்ள நடை (Poetic Prose) ஒன்றுண்டென்று ஆங்கிலமேதாவிகள் அருமையா யுணர்ந்திருக்கிறார்கள்! Plato என்பவர் வசனப்பாட்டில் வண்ண வண்ணமா யெழுதியுள்ளாராம்! பைபிலில் அனேக வாக்கியங்கள் பாட்டுகளாகவே இருக்கின்றன என்று Mc. Mordie எடுத்து மேன்மையாய்க் காட்டியிருக்கிறார். Carlyle என்னும் கம்பீர நடையினர், எழுதியுள்ள ஏற்றமுள்ள புத்தகங்களெல்லாம், ஆவேஸமென்பது பொங்கிவீசும் அற்புதமான வசனப்பாட்டே என்று வித்யா மண்டல வியன்பெரு நூலாரும் பிறரும் விநோதமா யெடுத்துக் காட்டுகிறார்கள்.

நம்மவருள் பாட்டே வேண்டுமென்று சில்லோரும், பாடிப் பாடியாயிற்று, பாடிப்பாடி நாம்கெட்டோம், இன்னும் பாடிப்பாடி அழுவதில் என்னபலன் என்று வேறு சில்லோரும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விரு கக்ஷியினரும் ஏராளமாய்ப் படித்த ஆவேஸக்காரர்களா யிருக்கக்கூடும்.

வசனமெழுதுவது அறிவிலக்கியத்திற்கு அவசியம்வேண்டுவது! வசனமும் பாட்டும் வாகாய்க்கலந்தால், உன்னதமான சக்தி யிலக்கியத்தின் வன்னத்தை யடைந்து வண்மையாய் விளங்கும்! வசனமெழுதுவதில் பாஷை தற்காலமடைந்திருக்கிற நிலைமையை யும் தற்காலஅவசியங்களையும் முக்காலும் கவனிக்கவேண்டும். கொடுமொழி கொண்டு கடுஞ்சந்தி புணர்த்து; பற்களின் நடுவில் கற்களை யுடைப்பதுபோல், பழைமையான பாஷையில் கடுமையாய்க் கூற

லாகாது. நாற்றம் என்னும் பதம் நல்ல வாசனை யென்னும் பொருள் பட்டிருப்பதுகொண்டு, சென்னையம்பதியிலுள்ள உன்னதப் பூக்கடைக்குச் சென்று, மல்லிகைப்பூ நாறுகிறதா என்று மகிழ்ந்தொருவன் கேட்பானுயின், என்னமா யிருக்குமென்று நீங்களே எண்ணிப்பாருங்கள்! சென்னைக்கருகில் சாவரம்பேடு என்னும் சிறிய கிராம மொன்றுண்டு! அவ்வூராரான என்தன் அன்பரொருவர், அஃது சிறுவரிருவ ரம்பெடுத்தவூர், அதாவது, ராமபிரானின் குமாரர்களான, குசன் லவன் என்பார் வில்வித்தைபயின்ற இடம் எனப் பொருள்படுமென்றும் அவ்வாறதனை யெழுதாதுவிட்டுச் சாவரம்பேடு எனப் பிழைபட எழுதுகிறார்கள் அறிவிற்குறைந்த அஞ்ஞானிகள் என்றும அவர் என்னிடம் அமர்த்தலாய்க் கூறுவதுண்டு! அவர் பேச்சைக் கேட்டு, சாவரம்பேடு என்பதற்குப் பதிலாகச் சிறுவரிருவரம்பெடுத்தவூர் என்று தபாற்கடிதத்தில் எழுதிவேனுயின், தபால்போய்ச் சேருமா? மல்லிகைப்பூ நாறுமா என்றால் கடைக்காரன் சண்டைக்கு வருவான்; சிறுவரிருவ ரம்பெடுத்தவூர் என்று எழுதினல், தபாற்காரன் கிழித்துத் தபாலாபீசிலேயே போட்டுவிடுவான்! இலக்கணத்தில் மரபு எனக்கூறுவதும், வழுவமைதி எனவந்ததும், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினனே என்று பவணந்தியாரே பட்டப்பகலாய் நமக்குக்கூறுவதும் எல்லாம் காலபேதங்களால் வந்த கோலங்களைக் குறித்தேயாம்! சொல்லுருவம் மாறும், காலபேதத்தால் சொற்பொருள் மாறும்— இலக்கியங்கண்டதற் கிலக்கண மியம்பவேண்டியிருத்தலின் இலக்கணமும் மாறும். இதையெல்லாம் ஆங்கிலர் Historical accidence என்பர். இவற்றை யெல்லாம் நூலெழுதப்புகுவோர் அதிலும் வசன நூலெழுதுவோர் முக்கியமாய்க் கவனித்தல்வேண்டும்.

இனி, பாட்டு அவசியமா என்பதைப் பக்குவமாய் நாம் ஆராயவேண்டும்! பாட்டுப்பாட முடியாதவர்கள் பாட்டுப்பாடுவதில் பலனில்லைதான்!

வாய்த்த திருநாகை வாகான தேவடியாள் ஒருத்தியிருந்தாளாம் ஒருகாலத்தில்! அவள், வெள்ளிமூக்குத் தம்பிரானுகிய கொள்ளிக்கர்த்தபம் கொடுமையாய்ப் பாடுவதுபோல் அருமையாய்ப் பாடுவாளாம் அரிகாம்போதி ராகம்! ஒருநாளிவளுக்கு உத்ஸாகம் வந்து ஓயாது பாடினளாம் உன்னதமான அந்தராகத்தை!

அதற்குமுன்னாள் கழுதைகாணாது போன வண்ணான் கண்டேன் கண்டேனென்று கயிறெடுத்து வந்தானாம். இதைக் கண்ட காளமேகம்,

"வாய்த்த திருநாகை வாகான தேவடியாள்
பாழ்ந்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்று
கழுதை கெட்ட வண்ணான் கண்டேன்கண்டேனென்று
பழுதை யெடுத்தோடிவந்தான் பார்"

என்று பரிகாசமாய்ப் பாடினாராம் என்கிற கதையை நாம் காதலால் கேட்டிருக்கிறோம்! இந்தத் திருநாகைத் தேவடியாளைத் திருக்காம்போதிராகம் பாடும்படி எவரேனும் கேட்க இசைவாரா? அம்மாதிரியே நவரசம்வாய்ந்த நல்லபாடலைப் பாடமுடியாதவரையெல்லாம் பாடச்சொல்லி யாரும் சொல்லார்! தெம்மாங்கு பாடுவோனைத் தேவகாந்தாரி பாடச்சொல்லியும், தில்லானா பாடுவோனைத் திவ்யமான தோடி பாடச்சொல்லியும், யாவர்தாம் கேட்பார், யாவர்தாம் மனங்கொள்ளுவார்? அவ்வாறே சாத்துக்கவியும் சரமகவியும் மாத்திரமே பாடுவோரை வீரகாவியமாகும் பாரகாவிய மியற்றச் சொல்லி யாவர்தாம் கேட்டுக்கொள்ளுவார், யாவர்தாம் வேண்டிக்கொள்ளுவார்! இதனாலேயே, அநேகர் பாடமுடியாது பரதவிக்கிறார்கள் என்பதாலேயே, பாட்டால் பிரயோசனமில்லை, பாட்டுப்பாடி யழுவதால் பலனேயில்லை என்றும் கூறுவது சுத்தக் குறைவான காரியம்! அழகான பொருளை அழகான சொற்களில் யாவனொருவன் அமைக்கின்றானோ அவனே கவிபாடற்குரியன், அவனே இயற்பெரும்புலவன்— பொருளிலும் கீதமிருக்க வேண்டும், சொல்லிலும் கீதமிருக்கவேண்டும், என்கிறார் கார்லைல் என்னும் கனம்பொருந்திய மேதாவியார். கவீஸ்வரர்களின் மனதைக் கவலைப்படுத்தாதே! அதனுடைய ஆழத்தைக்கண்டு பிடிக்க நீ அசக்தனாயிருக்கின்றாய் என்று கூறுகிறார் இணையில்லா Tennyson என்னும் இயற்பெரும்புலவர்! அத்தகைய பாடலையும், அதனைப் பாடும் புலவனையும் அவமதிப்பது நாம் அருவருக்கத்தக்க காரியம்! பாட்டில்லாவிட்டால், பாவிகளாவோம், பரதேசிகளாவோம்! நாகரீகமான தேசத்திற்கு நாணயமான அதன்பாட்டே நல்லதொரு சான்றாகும்! நம்மையாளும் மன்னர்பிரான்கூட நாட்டிற்றேர்ந்த நல்லவனான கவிவல்லவனை சமஸ்தான கவீஸ்வரனாகச் சார்பிலே வைத்திருக்கிறார். ரவிஎருகனு தாவு கவி எருகுனு என்கிறார்கள் தெலுங்கரும்!

எந்நாளு மழியாது, எந்நாளும் தன்மணம் குன்ருது, எந்நாளும் தன்னுடைய உத்தமக்குணத்தை உதறிவிடாது, எந்நாளும் ஓங்கி, எந்நாளும் எப்பக்கத்திலும் பரவி எங்கெங்கும் தன்னுடைய தங்கமாகும் குணத்தைத் தூய்மையாகக்காட்டி இங்கிதம்வாய்ந்த இயல்புள்ள சக்தி நூற்குப் பாட்டும் பாச்சுவைபரவிய வசனமுமே ஏற்றகருவிகளா யியைந்து நிற்கின்றன. ஹா! பாட்டுவேண்டாமென்று யாவர்சொல்லக்கூடும்? பாட்டு வேண்டாமென்று தைரியமா யெவர்தாம் தாரணியி லுரைசெய்வார்? பாட்டில்லா விட்டால் நாட்டி லெங்கே நாணயம் கிடைக்கும்? உன்னதமான நாட்டில் உயர்வென்பது முளைத்துத் துளிர்த்துப் பூத்துப் பழுத்தக்காலன்ருே அஃது பாட்டெனப்பெறும்? நாட்டோர்புகழும் பாட்டரசே, காசினியோர்கொண்டாடும் கற்பகமே, இன்னிசையோடு சொல்லிசைதன்னை வல்லவாறு புணர்க்கும் வர்னக்களஞ்சியமே, வான்மாரி தனைநகைத்துத் தேன்மாரிபொழியும் திவ்யதிருப்பாட்டே! ஹா! பாட்டே, அற்புதப்பாட்டே, பொற்புறுபாட்டே, நல்லதே விளைக்கும் நாணயத்திருப்பாட்டே! உன் நளினத் திருவழகை நானெடுத்துரைக்க முடியுமா? நீ பூமியி லிருப்பாய், வானத்திற் பறப்பாய், பக்குவமாய்ப் பின்னர் பாதாளத்தி லிறங்குவாய்! நீயே சக்தியிலக்கியத்திற்கு நேமிக்கப்பட்ட நின்மலக் கருவியாவாய்! உன்னுலேயே சக்தியிலக்கியம் உறுதியாக வேண்டியது! உன்னுலும் உன்தன் வடிவழகை யேற்ற உத்தம வசனத்தாலுமேதான் சக்தியிலக்கியம் இத்தரையில் நித்தலுமே நிலாவவேண்டும்!

இதுதான் நமது தேசாபிமானிகள் செய்துகொள்ள வேண்டிய பிரார்த்தனை! இதுதான் நமது பாஷாபிமானிகள் செய்து கொள்ள வேண்டிய வேண்டுகோள்! அறிவிலக்கியம் ஒருபக்கம் அற்புதத்தைச் செய்திருப்பச் சக்தியிலக்கியம் மற்ருெருபக்கம் மனதை வசப்படுத்த, எல்லாவற்ருலும் உல்லாசமடைந்த நமது இலக்கியத்திற்கு வேறுயாது வேண்டியிருக்கும்?

சக்தி யிலக்கியத்திற் கியைந்ததாய் மேற்சொல்லப்பட்ட உத்தமப்பாட்டில் பற்பல விதமுண்டு. Epic Poetry என்னும் வீரகாவியமாகும் பாரகாவியமும், Dramatic Poetry என்னும் நாடககாவியமும், Didactic Poetry என்னும் உபதேசத்திற் கென்றெழுந்த உத்தமகாவியமும், பக்திக்காவியங்களும் இவைபோன்றவை இன்னும் சிலவும் நன்னயம் விளைத்து நாசரீகம் செய்பவையாயிருக்

கின்றன. வசனப் பாட்டில், உத்ஸாகம் விளைக்கக்கூடிய உபந்யாசங்களும், மனதை வசப்படுத்தக்கூடிய மாண்புள்ள வியாஸங்களும், நாவல்களென்கிற அபிநவகதைகளும், Romances என்கிற விநோதக் கட்டுக்கதைகளும் பற்பலசேர்ந்து பரிமளம் செய்கின்றன!

சக்தியிலக்கியத்திற் சேர்ந்த பக்திநூல்களும், வீரகாவியங்களாகும் பாரகாவியங்களும் ஏராளமாய் நம்மிடம் தாராளமாய்க் காண்கின்றன! ஆழ்வார்களருளிய அற்புதப்பாடல்களும், நால்வர்கள் தந்த நல்லிசைப்பாடல்களும், இன்னும் பெரியோர்செய்த எண்ணிறந்த பாடல்களும் பக்திப்பாடல்களாய்ச் சக்தியை விளைக்கின்றன! செம்பொன்னில் நவமணி பதித்ததுபோல், செந்தமிழில் நவரசத்தை யூற்றிய எம்தம் கவிச்சக்ரவர்த்தியாராகிய கம்பர் பாட்டே, வீரகாவியத்திற்கு நேரான உதாரணமாய்க் கொள்ளலாம். நாளேற நாளேற, நாடகக் காவியங்களும் நாவல்க ளென்கிற அபிநவ கதைகளும் வெளிப்பட்டு நமக்குக் களிப்பைத் தருகின்றன. நண்பர்களே, தமிழ்நாட்டிற்பிறந்து தமிழ்நாட்டில் வளர்ந்து தமிழ் நாட்டிற் பயின்று தமிழ்மயமாகிய தமிழர்களே! உங்களைத் தமிழர்களென்றுகூற உத்ஸாகங் கொள்ளுகின்றேன் நான்! வித்தகக் குறள் போன்ற உத்தமநூல்கள் வெளிவரநேர்ந்த சிங்காரத் தமிழையே சிறப்போடு முரிமைகொண்ட உங்களைத் தமிழர்களே என்று கூப்பிடுவதைக்காட்டினும், உயர்ந்த வேறெந்தப்பட்டப் பெயரால் உங்களை அழைக்கக்கூடும்! ஆகையால், இன்னும் ஒரு முறை சொல்லுகிறேன், செந்தமிழ் நாட்டிற்பிறந்து செந்தமிழ்ச் செல்வமே படைத்துச் செந்தமிழ் செந்தமிழ் மபமாகவே சுந்தரங் கொண்ட நண்பர்களே, சுந்தரமான நம்தம் தமிழ்ப்பாஷை யிலக்கியத்தை நானுவழிகளிலும் வளர்க்கவேண்டியது உங்களைப்பொறுத்த உயர்ந்த கடமையா யிருக்கிறது! நீங்கள் இந்த உத்தமமான கடமையில் உளஞ்சலிக்கக் கூடாது. பாஷையிலக்கியம் பண்புடன் வளராவிட்டால், எந்தச்சீரும் உண்டாகாது, எந்தச்சிறப்பும் பெருகாது! பாஷையிலக்கியம் பக்குவமாய் வளர வளர, எல்லாச் சீரும் பெருகும், எல்லாச்சிறப்பும் உண்டாகும், நாடுசெழிக்கும், நன்மையேவிளையும்: தமிழராகிய நாமெல்லோரும் தக்க இந்த நோக்கத்தை முன்னுக்குவைத்து முயன்று வருவோமாக!